# இயல்பு கூட்டப்பொருட்கள்

1. நாகர்கோவில் நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தி அரசாணை எண்.G.O.(MS) No.41, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.28.02.2019 இன்படி அரசாணை வெளியிடப்பட்டு நாகர்கோவில் மாநகராட்சி சட்டம் 2019 (தமிழ்நாடு சட்டம் 11 of 2019) என உருவாக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் மாநகராட்சிச்சட்டம் 2019 ஆனது ஏற்கனவே செயல்பட்டு வரும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981இனை தழுவி நடைமுறைப்படுத்தப்படும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சியானது, பொதுமக்களின் வசதிக்காகவும் மாநகராட்சி பணிகளை தொய்வின்றி செயல்படுத்தி பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் நோக்கில் மாநகராட்சி பணிகளை செயல்படுத்திட ஏதுவாக வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என நான்கு மண்டலங்களாக பிரித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நாகர்கோவில் மாநகராட்சியின் 52 வார்டுகளை பொதுமக்களின் அடிப்படை வசதிகளை உடனுக்குடன் நிறைவேற்றிடவும் நாகர்கோவில் மாநகராட்சியினை ஒரு மண்டலத்திற்கு 13 வார்டுகள் என்ற அடிப்படையில் நான்கு மண்டலங்களாக, அதாவது வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு என பிரித்து கீழ்கண்டவாறு செயல்படுத்திட அங்கீகாரத்திற்காக.

| மண்டலங்கள் | வார்டு எண்கள் |
|---|---|
| வடக்கு மண்டலம் | 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 12, 13, 14, 15, 24 |
| கிழக்கு மண்டலம் | 11, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 44, 45 |
| தெற்கு மண்டலம் | 35, 36, 37, 41, 42, 43, 46, 47, 48, 49, 50, 51, 52 |
| மேற்கு மண்டலம் | 1, 2, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 38, 39, 40 |

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.12236/1999/எப்1

**தீர்மானம் எண். 170– அங்கீகரிக்கப்பட்டது.**

2. இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2019–2020–ம் ஆண்டிற்கு தேவையான தளவாட சாமான்களான கம்புமார், விளக்குமார், பிளாஸ்டிக்கூடை மற்றும் தகடு போன்றவைகளும், மேலும் தொற்று நோய் கிரிமியினை அழிக்கப்பயன்படுத்தப்படும் சுண்ணாம்பு, பிளீச்சிங் பவுடர், பினாயில் போன்றவையும் அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு கூட்டுறவு பண்டகசாலை மூலம் வாங்குவதற்கு தேவையான உத்தேச செலவினம் ரூ.15,00,000/–த்திற்கு அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.4795/2019/எச்1

**தீர்மானம் எண். 171– அங்கீகரிக்கப்பட்டது.**

3. இம்மாநகராட்சிக்கு சொந்தமான வலம்புரிவிளை உரக்கிடங்கில் இயங்கி வரும் எடை மேடை இயந்திரத்திற்கு வருடாந்திர எடை முத்திரை 26.03.2019–ல் இடப்படவேண்டுமென்பதால், உதவி கட்டுப்பாட்டு அதிகாரி, சட்டமுறை எடை அளவு தொழிலாளர் துறை – நாகர்கோவிலுக்கு ரூ.2,100/– செலுத்தி முத்திரையிடப்படவேண்டும். மேற்படி தொழிலாளர் துறைக்கு திரு.கே.சத்தியராஜ், துப்புரவு ஆய்வாளரால் ரூ.2,100/– (ரூபாய் இரண்டாயிரத்தி நூறு மட்டும்) செலுத்தி முத்திரையிடப்பட்ட வகைக்கு ஆன செலவினத்திற்கு அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –அவசர அவசியம் கருதி மேற்படித்தொகை வழங்கப்பட்டதை அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.3141/2019/எச்1

**தீர்மானம் எண். 172– அங்கீகரிக்கப்பட்டது.**

4. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண். 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15 (Zone I) பகுதிகளில் உள்ள போர்வெல் மின்மோட்டார்கள், பேனல்போர்டு, ஸ்டாட்டர் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட கோப்புகள் விசாரணையின் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இதுநாள் வரையிலும் மேற்படி கோப்புகள் கிடைக்கப்பெறாததால் குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுதுகளை ரூ.4,50,000/– மதிப்பீட்டில் அத்தியாவசிய பணியாக திரு.அ.பாஸ்கரன் என்பவர் மூலம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் சரி செய்ய உள்ளது அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.

மதிப்பீடு எண்.03/2019–2020

**தீர்மானம் எண். 173– அங்கீகரிக்கப்பட்டது.**

5. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண். 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 42, 43, 44, 45 (Zone II) பகுதிகளில் உள்ள போர்வெல் மின்மோட்டார்கள், பேனல்போர்டு, ஸ்டாட்டர் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட கோப்புகள் விசாரணையின் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இதுநாள் வரையிலும் மேற்படி கோப்புகள் கிடைக்கப்பெறாததால் குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுதுகளை ரூ.5,80,000/– மதிப்பீட்டில் அத்தியாவசிய பணியாக திரு.அ.பாஸ்கரன் என்பவர் மூலம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் சரி செய்ய உள்ளது அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.

மதிப்பீடு எண்.04/2019–2020

**தீர்மானம் எண். 174– அங்கீகரிக்கப்பட்டது.**

6. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண். 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37 (Zone III) பகுதிகளில் உள்ள போர்வெல் மின்மோட்டார்கள், பேனல்போர்டு, ஸ்டாட்டர்

ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட கோப்புகள் விசாரணையின் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இதுநாள் வரையிலும் மேற்படி கோப்புகள் கிடைக்கப்பெறாததால் குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுதுகளை ரூ.3,15,000/– மதிப்பீட்டில் அத்தியாவசிய பணியாக திரு.அ.பாஸ்கரன் என்பவர் மூலம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் சரி செய்ய உள்ளது அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.

மதிப்பீடு எண்.05/2019–20

**தீர்மானம் எண். 175– அங்கீகரிக்கப்பட்டது.**

7. இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண். 38, 39, 40, 41, 46, 47, 48, 49, 50, 51, 52 (Zone IV) பகுதிகளில் உள்ள போர்வெல் மின்மோட்டார்கள், பேனல்போர்டு, ஸ்டாட்டர் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட கோப்புகள் விசாரணையின் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இதுநாள் வரையிலும் மேற்படி கோப்புகள் கிடைக்கப்பெறாததால் குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுதுகளை ரூ.3,10,000/– மதிப்பீட்டில் அத்தியாவசிய பணியாக திரு.அ.பாஸ்கரன் என்பவர் மூலம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் சரி செய்ய உள்ளது அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.

மதிப்பீடு எண்.06/2019–20

**தீர்மானம் எண். 176– அங்கீகரிக்கப்பட்டது.**

**8.** இம்மாநகராட்சி வார்டு எண்.27 முதல் 52 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறு மின் மோட்டார்கள், ஸ்டாட்டர்கள் மற்றும் இதர மின் சாதனங்களில் ஏற்படும் பழுதினை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் விநியோகம் தடையில்லாமல் வழங்கிடவும் அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.25,00,000/–க்கும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.4052/2019/இ3

**தீர்மானம் எண். 177– அங்கீகரிக்கப்பட்டது.**

**9.** இம்மாநகராட்சி வார்டு எண்.1 முதல் 26 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறு மின் மோட்டார்கள், ஸ்டாட்டர்கள் மற்றும் இதர மின் சாதனங்களில் ஏற்படும் பழுதினை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் விநியோகம் தடையில்லாமல் வழங்கிடவும், அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.25,00,000/–க்கும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.4053/2019/இ3

**தீர்மானம் எண். 178– அங்கீகரிக்கப்பட்டது.**

**10.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான முக்கடல் அணையில் இருந்து தலைமை நீரேற்று நிலையம் வரை தண்ணீர் கொண்டு வரும் **600**mm பிரதான குழாயில் இறச்சகுளம் RK திருமணமண்டபம் பின்புறம் தென்றல் நகர் பகுதியில் பழுது ஏற்பட்டு தண்ணீர் பெருமளவு விரயம் ஆகி வருகிறது. ரூ.**49,000/–** மதிப்பீட்டில் தண்ணீரின் முக்கியத்துவம் கருதி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15**–ன் கீழ் மேற்படி பணியினை திரு.ஜோஸ்லின் கோல்டு லிவிங்ஸ்டன் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள இருப்பது பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.
மதிப்பீட்டு எண்.**145/2018–2019/**இ**3**
***தீர்மானம் எண். 179– அங்கீகரிக்கப்பட்டது.***

**11.** இம்மாநகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணியானது செயல்படுத்த **11** இடங்களில் உரக்குடில்கள் (Micro Compost Centre) ரூ.**848.60** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண்.**22866/P3/2018**, நாள்.**23.08.2018**–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் வரிசை எண்.**10** பார்வதிபுரம் ஆரச்சார் நிலத்தில் உரக்குடில் மற்றும் சுவர் அமைக்க ரூ.**80.00** இலட்சம் மதிப்பீட்டில் பணி செய்ய தேர்வு செய்யப்பட்ட இடம் நீதிமன்ற வழக்கில் உள்ளதால் மேற்படி இடத்திற்கு பதிலாக மகாராஜா ஸ்ரீஅவிட்டம் திருநாள் நினைவு நகராட்சி காப்பக மைதானத்தில் மேற்படி பணியினை செய்ய அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.
மதிப்பீட்டு எண்.**518/2018–2019**
***தீர்மானம் எண். 180– அங்கீகரிக்கப்பட்டது.***

**12.** இம்மாநகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான Toner கள் வாங்க நிர்வாக அனுமதி பெறப்பட்டு தேர்தல் நாள் நடத்தை விதி அமுலுக்கு வந்ததால் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவில்லை. தற்போது அவசர தேவையினை கருத்தில் கொண்டு **2017–2018** –ம் ஆண்டு வாங்கப்பட்ட நிறுவனமான Lakshmi Cartridge Bangalore நிறுவனத்திடமிருந்து கீழ்கண்டவாறு Toner கள் 88A-70 எண்ணம், மற்றும் 55A -10 எண்ணம் ரூ.**90,000/–** மதிப்பில் வாங்கிடவும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.
கோப்பு எண்.**20026/2009/**இ**3**
***தீர்மானம் எண். 181– அங்கீகரிக்கப்பட்டது.***

**13.** இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74, Au.6969–ற்கு இடது பக்கம் உள்ள முன் டயர் பழுதடைந்த நிலையில்யுள்ளதால் புதிய டயர் வாங்கி பொருத்துவதற்கு கீழ்கண்ட ஒன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | Asirvatham Tyres Nagarkovil | Rs. 12,170/- |

| | | |
|---|---|---|
| 2 | Royal Vehicle Service Centre Royal Tyres Nagarkovil | Rs. 12,250/- |
| 3 | Royal Auto Tyres | Rs. 12,350/- |

மேற்படி குறைந்த விலைப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாக ரூ.12,170/– Asirvatham Tyres நாகர்கோவில் வழங்கியதை ஏற்று விநியோக உத்தரவு வழங்கவும் அதற்காகும் செலவினத்திற்கும் பார்வைக்கும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** –அங்கீகரிக்கலாம்.
கோப்பு எண்.1767/2012/இ2

**தீர்மானம் எண். 182– அங்கீகரிக்கப்பட்டது.**

**14.** இம் மாநகராட்சி பொறியர் பிரிவு தெருவிளக்கு வாகனம் எண்.TN74 D.2093–ற்கு **19.06.2019**–ல் தகுதி சான்று முடிவடைவதால் புதியதாக தகுதி சான்று பெறுவதற்கும் கீழ்கண்ட பழுது பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.35,000/–க்கு அங்கீகாரத்திற்காக.

**வேலை விபரம்**

1. வாகனம் முழுமையாக சர்வீஸ்
2. கியர்பாக்ஸ் ஆயில் லீக், கியர் லிவர் புஸ் கிட் மாற்றுதல்
3. ஓட்டுநர் இருக்கை குஷன் வேலை
4. கேபின் மேற்கூரை சரி செய்தல்
5. நான்கு சக்கரங்களும் கிரீஸ் பேங்கிஸ்
6. எஞ்சின் ஆயில், ஆயில் பில்டர் மாற்றுதல்
7. வாகனம் முழுமையாக வர்ணம் பூசுதல்
8. வாகன மின் இணைப்புகள் ஆய்வு மற்றும் சரி செய்தல்

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.685/2018/இ2

**தீர்மானம் எண். 183– அங்கீகரிக்கப்பட்டது.**

**15.** இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் TN74 2093 தெருவிளக்கு பராமரிப்பு வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய **13.05.2019** அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | A.R.K. Automobiles Nagarkovil | Rs. 34,520/- |
| 2 | K.S.S.S. Auto Mobiles Nagarkovil | Rs. 34,920/- |

குறைந்த விலைப்புள்ளி A.R.K. Automobiles ரூ.34,520/– வழங்கியதை ஏற்று வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்காக.

**<u>அலுவலக குறிப்பு</u>**– அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.685/2018/இ2

**தீர்மானம் எண். 184– அங்கீகரிக்கப்பட்டது.**

**16.** நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 1–ல் உள்ள அரசு காலனியில் மாநகராட்சி மூலம் ரூ. 17 இலட்சம் மதிப்பீட்டில் மின்வசதி, கழிவறை வசதி, சமையல் அறை வசதி, குடிநீர் வசதி மற்றும் பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வசதியாக 1700 சதுர அடியில் சமுதாய நல கூடம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மாநகராட்சி பொறியாளர் தனது குறிப்பில் மேற்படி கட்டிட பணிகள் முடிவுற்றமையால் அதனை செயல்படுத்தும் விதமாக வருவாய் பிரிவிற்கு அனுப்ப உரிய நடிவடிக்கை தொடரலாம் என குறிப்பிட்டுள்ளார். தற்போது பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள பொறியியல் பிரிவில் இருந்து வருவாய் பிரிவிற்கு கோப்பு வரப்பெற்றுள்ளது.

மேற்படி கட்டிடத்திற்கு ஒரு நாள் வாடகையாக ரூ.3,000/– என நிர்ணயம் செய்து வைப்புத் தொகையாக ரூ.3,000/– மற்றும் மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் வைப்புத் தொகையாக ரூ.2,000/– என மொத்தம் வைப்புத் தொகையாக ரூ.5,000/– என நிர்ணயம் செய்யலாம். கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி கட்டிடத்தை பொது நிகழ்ச்சிகள் நடத்த ஒரு நாள் வாடகை அடிப்படையில் விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>நிபந்தனைகள்–</u>

1. மேற்படி கட்டிடத்தை பொது நிகழ்ச்சிக்காக வாடகை எடுப்பவர்கள் மத சம்மந்தமான காரியத்திற்காகவோ அல்லது அரசியல் சம்மந்தமான காரியத்திற்காகவோ பயன்படுத்தக் கூடாது.
2. மேற்படி கட்டிடம் வாடகை எடுப்பதற்கு முன் மின் கட்டணத்திற்கான அளவு மாணியில் ரீடிங் குறிக்கப்படும், கட்டிடத்தினை திரும்ப ஒப்படைக்கும் சமயம் மீண்டும் அளவு மாணியில் ரீடிங் குறிக்கப்படும். அதில் எவ்வளவு யூனிட் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதோ அதற்காக ஒரு யூனிட்டிற்கு ரூ.8.05பை (நடப்பில் உள்ள அதிகபட்ச டேரிப், யூனிட் கட்டணம் மாற்றத்திற்கு உரியது) வசூல் செய்யபப்டும்.
3. மேற்படி கட்டிடத்தில் எந்தவித சேதாரம் இல்லாமல் பார்த்து கொள்ளவேண்டும், தவறினால் தாங்களே முழு பொறுப்பாவீர்கள்,
4. கட்டிடத்திற்குள் மது அறுந்தவோ மற்றும் அரசுக்கு எதிரன காரியங்களை செய்யவோ கூடாது. தவறினால் சட்ட ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
5. கட்டிடத்தில் உள்ள மேஜைகள், நாற்காலிகள், மின் விளக்குகள், மின் சுவிட்ஸ் போர்டுகள், மின் மோட்டார் மற்றும் தடவாளசாமான்கள் கட்டிடத்தை ஒப்படைப்பு செய்யும் போது சேதாரமில்லாமல் இருக்க வேண்டும். தவறும் பட்சத்தில் இரட்டிப்பு தொகையாக வசூலிக்கப்படும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 04335/2019/அ6

**தீர்மானம் எண். 185– அங்கீகரிக்கப்பட்டது.**

**17.** நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சேகரமாகும் திடக்கழிவுகளை On Site Compost தயாரிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரின் **07.03.2019–**ம் தேதிய அறிக்கையின்படி பொது சுகாதார பிரிவு **–7–**ல் வார்டு எண்.**34** (குறுந்தெரு பூங்கா) மற்றும் பொதுசுகாதார பிரிவு **–15–**ல் வார்டு எண்.**32** (சர்.சி.பி. ராமசாமிஐயர் நினைவு பூங்கா) ஆகிய இரண்டு பூங்காவிலும் சேகரமாகும் திடக்கழிவுகளை On Site Compost மூலம் தயாரிக்கப்படும் உரத்தினை விற்பனை செய்வதற்கும், அதற்க்கான விலை கிலோ ஒன்றுக்கு ரூ.**5.00** நிர்ணயம் செய்தும், அதன் மூலம் கிடைக்கும் வருவாயினை சம்மந்தப்பட்ட துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கவும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.2396/2019/எச்1

**தீர்மானம் எண். 186– அங்கீகரிக்கப்பட்டது.**

**18.** நாகர்கோவில் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் தேசிய பசுமை தீர்ப்பாய வழக்கு எண்.OA.No.606/2018–க்கு நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள் தொடர்பாக **07.03.2019–**ம் தேதி நடைப்பெற்ற ஆய்வுகூட்டத்தில் விவரம் தெரிவிக்கப்பட்டது. அதன் ஆவணங்கள் தயார் செய்யப்பட்ட வகைக்கு செலவுத்தொகை ரூ.**2,459/–** திரு.R.ராஜேஷ் துப்புரவு ஆய்வாளர் தனது **11.03.2019–**ம் தேதி அறிக்கை பட்டியலுடன் சமர்பித்துள்ளார். எனவே, மேற்படி செலவுத்தொகை அன்னாருக்கு வழங்கும் பொருட்டு அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.13258/2016/எச்1

**தீர்மானம் எண். 187– அங்கீகரிக்கப்பட்டது.**

**19.** இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவு யானைக்கால் நோய் தடுப்பு பிரிவு இம்மாநகராட்சிக்குட்பட்ட **52** வார்டுகளில் கொசு ஒழிப்பு பணிக்காக உபயோகப்படுத்தப்படும் மருந்துகள் **2019–2020** ஆம் ஆண்டிற்கு வாங்க உத்தேச செலவு தொகை ரூ.**14** இலட்சம் ஆகும். மேற்படி மருந்தினை அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து வாங்கவும், மேற்படி தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்ய அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4787/2019/எச்2

**தீர்மானம் எண். 188– அங்கீகரிக்கப்பட்டது.**

**20.** இம்மாநகராட்சிக்குட்பட்ட **52** வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளில் **30** வார்டுகள் மட்டும் தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள **22**

வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள், அலுவலகங்கள், மார்க்கெட் மற்றும் பேருந்து நிலையங்களில் அமைந்துள்ள தெருவிளக்குகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள **2019–2020–**ம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**16,00,000/–** (ரூ.பதினாறு லட்சம்) **–**க்கு அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4555/2017/இ4

**தீர்மானம் எண். 189– அங்கீகரிக்கப்பட்டது.**

**21.** இந்நகராட்சிக்குட்பட்ட WCC சந்திப்பில் "பேருந்து நிறுத்தம்" என அறிவிப்பு பலகை அமைக்கும் பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பெற்றதில், பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | M/s. House key Engineering works, Puthu Kudiyiruppu, Nagercoil | 10,000/– |
| 2 | M/s. I.J.K. Engineering works<br>North Street, Nagercoil | 11,000/– |
| 3 | திரு.கே.மணிகண்டன்<br>ஒப்பந்தக்காரர், சரக்கல்விளை | 8000/– |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.மணிகண்டன், என்பவர் ரூ.**8000/–**க்கு கொடுத்துள்ளதை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.2895/2019/இ1

**தீர்மானம் எண். 190– அங்கீகரிக்கப்பட்டது.**

**22.** நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான கலைவாணர் கலையரங்கம் வரி விதிப்பு எண் **2011431,** திரு. ஆனந்த் பொன்னுசாமி என்பவர் மாதவாடகையாக ரூ.**28,752/–** என உரிமம் அனுபவித்து வந்தார். மேற்படி உரிமம் **31–10–2017–**ல் முடிவுற்று அதன்பின் நகராட்சியால் மேற்படி கட்டிடத்திற்கு உரிமம் புதுப்பித்து வழங்கப்படவில்லை.

மேற்படி கட்டிடம் நகராட்சிக்கு தேவைப்படுவதால் கட்டிடத்தை நகராட்சி வசம் ஒப்படைப்பதற்கு திரு. ஆனந்த் பொன்னுசாமியிடம் நகராட்சி வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் அலுவலர் அவர்களால் பல முறை நேரில் தெரிவித்தும் அன்னார் கட்டிடத்தை நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை. ஆதலால் நகராட்சி மேற்படி கட்டிடத்தினை **31–03–**

2018 அன்று வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் அலுவலரால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேற்படி கட்டிடத்திற்குள் அன்னார் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த வெடிப்பொருட்களை மாற்றப்பட்டு மூன்று தினங்களுக்குள் கட்டிடத்தினை காலி செய்திடவும், தவறும் பட்சத்தில் அதனால் ஏற்படும் இழப்பிற்கு தாங்களே முழுப்பொறுப்பாவீர்கள் என இவ்வலுவலக 04–05–2018 தேதியிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பிற்கு எதிராகவும், நகராட்சிக்கு எதிராகவும் திரு.ஆனந்த் பொன்னுசாமி என்பவரால் சென்னை உயர்தீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் W.P (MD) No. 13104/2018 தொடரப்பட்டது.

மேலும் அன்னார் மேற்படி கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ள வெடிப் பொருட்களை காலி செய்யாமல் இருந்ததினால் 24 மணி நேரத்திற்குள் வெடிப்பொருட்களை காலி செய்யவேண்டும் என அன்னாருக்கு இவ்வலுவலக 20–06–2018 தேதியிட்ட இறுதி அறிவிப்பு மூலமாக தெரிவிக்கப்பட்டு. அன்னார் இவ்வறிப்பிற்கு எதிராகவும் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் W.P (MD) No. 15539/2018 தொடரப்பட்டுள்ளது.

மேற்படி இரு வழக்கிற்கும் மாநகராட்சி வழக்கறிஞர் திரு. ஆதிமூலபாண்டியன் அவர்கள் ஆஜராகியமைக்கும் மற்றும் வழக்கு கட்டணத்திற்கும் அனுமதி வேண்டி அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.8473/2008/அ13

**தீர்மானம் எண். 191– அங்கீகரிக்கப்பட்டது.**

23. இம்மாநகராட்சிக்கு சொந்தமான கிருஷ்ணன் கோவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் அம்ரூத் திட்டம் 2016–ன் கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் நடைபெறுவதை தொடர்ந்து நிர்வாக பொறியர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கடிதம் எண்.4119/கோ.NGL/WSIS/இவஅ/2018, நாள். 04.01.2019–ன் படி சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் குடிநீர் திட்டப்பணிக்கு இடையூறாகவுள்ள மரங்களை அப்புறப்படுத்த தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மரங்களை அப்புறப்படுத்த சார் ஆட்சியர், நாகர்கோவில் அவர்களிடம் அனுமதி வழங்க கேட்டதில், நாகர்கோவில் சார் ஆட்சியர் அவர்கள் செயல்முறை ஆணை எண்.அ2/703/2019, நாள். 22.02.2019–ன் படி கீழ்கண்டவாறு மதிப்பீடு நிர்ணயம் செய்து வெட்டி அப்புறப்படுத்த அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மரங்களின் விபரம் | மரத்தின் எண்ணிக்கை | குறும விலை தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | அசோகா | 1 | 500/– |
| 2 | வாதுமை | 1 | 3500/– |
| 3 | புளி | 2 | 8000/– |
| 4 | வாகை | 3 | 12500/– |
| 5 | மா | 3 | 12000/– |
| 6 | வேம்பு | 17 | 144000/– |
| மொத்தம் | | 27 | 180500/– |

மேற்கண்டவாறு மரங்களை வெட்டி அப்புறப்படுத்த 06.03.2019 அன்று பொது ஏலம் நடைபெற்றதில் உயர்ந்த ஏல கேள்வியாக ரூ.2,00,000/–க்கு திரு.T.கருணாகரன், புல்லுவிளை,

எறும்புகாடு அஞ்சல் என்பவர் கேட்டுள்ளதை ஏற்று மரங்களை வெட்டி அப்புறப்படுத்த அனுமதி வழங்க அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.22185/2015/இ3

**தீர்மானம் எண். 192– அங்கீகரிக்கப்பட்டது.**

**24.** இம்மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா மற்றும் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையங்களில் அமைந்துள்ள தாய்மார்கள் பாலூட்டும் அறைகள் பழுதடைந்து உள்ளதால் அதனை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.70,000/–க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் விதிகள் எண்.1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி பணியினை திரு.K.மணிகண்டன் என்பவர் மூலம் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4152/2019/இ1

**தீர்மானம் எண். 193– அங்கீகரிக்கப்பட்டது.**

**25.** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை (ப) 41, நாள்.28.02.2019–ல், நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**–பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.3348/2019/சி1

**தீர்மானம் எண். 194– அங்கீகரிக்கப்பட்டது.**

**26.** நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறைஅரசாணை எண்.(ப) 41, நாள். 28.02.2019–ல் 01.03.2019 முதல் நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து, 01.03.2019 முதல் மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நாகர்கோவில் மாநகராட்சியின் 52 வார்டுகள் கீழ்கண்டவாறு 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம் | வார்டுகள் |
|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம் | 11, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 44, 45 |
| 2 | மேற்குமண்டலம் | 1, 2, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 38, 39, 40 |
| 3 | வடக்குமண்டலம் | 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 12, 13, 14, 15, 24 |
| 4 | தெற்குமண்டலம் | 35, 36, 37, 41, 42, 43, 46, 47, 48, 49, 50, 51, 52 |

நாகர்கோவில் மாநகராட்சி கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ள நிலையில், மைய அலுவலகம், மண்டல அலுவலங்களின் பணிகள் சிறப்பாக

செயல்படும் பொருட்டு, அரசாணை எண்.(ப) 237 நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 26.09.1996–ல் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநகராட்சிகள் பணிவிதிகள் 1996–ன்படி கீழ்க்கண்டவாறு மாநகராட்சி பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவேண்டும்.

I. பொதுப்பணி

| வ. எண் | பணியிடம் | மண்டலஅலுவலகம் | மையஅலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சிஆணையாளர் | | 1 | 1 |
| 2 | உதவிஆணையர் (வார்டுஅலுவலகம்) | 4 | – | 4 |
| 3 | உதவிஆணையர் (வருவாய்) | – | 1 | 1 |
| 4 | உதவிஆணையர் (கணக்கு) | – | 1 | 1 |
| 5 | உதவிஆணையர் (தனி) | – | 1 | 1 |
| 6 | நிர்வாகஅலுவலர் | 4 | 1 | 5 |
| 7 | கணக்குஅலுவலர் | – | 1 | 1 |
| 8 | மாமன்றசெயலாளர் | – | 1 | 1 |
| 9 | சட்டஅலுவலர் | – | 1 | 1 |
| 10 | மக்கள்தொடர்புஅலுவலர் | – | 1 | 1 |
| 11 | கண்காணிப்பாளர் | 4 | 2 | 6 |
| 12 | உதவிவருவாய்அலுவலர் | 4 | | 4 |
| 13 | நிருபர் | | 1 | 1 |
| 14 | உதவியாளர் | 4 | 8 | 12 |
| 15 | நேர்முகஉதவியாளர் (உதவியாளர் நிலையில்) | – | 2 | 2 |
| 16 | சிறப்புவருவாய்உதவியாளர் (Supernumerary Post) | 1 | | 1 |
| 17 | கணக்கர் (உதவியாளர் நிலையில்) | 4 | 1 | 5 |
| 18 | சுருக்கெழுத்துதட்டச்சர் | – | 1 | 1 |
| 19 | இளநிலைஉதவியாளர் மற்றும் தட்டச்சர் | 18 | 6 | 24 |
| 20 | தட்டச்சர் (Supernumerary Post) | – | 2 | 2 |
| 21 | வரிவசூலர் | 28 | – | 28 |
| 22 | ஓட்டுநர் | 20 | 9 | 29 |
| 23 | பொதுசுகாதாரமேற்பார்வையாளர் (Conservancy Supervisor) | 40 | – | 40 |
| 24 | பதிவறைஎழுத்தர் | 4 | 1 | 5 |
| 25 | தலைமைஅலுவலகஉதவியாளர் (மேயர்) | – | 1 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 26 | கணினிஉதவிதிட்டஅமைப்பாளர் | – | 1 | 1 |
| 27 | புள்ளிவிபரகணினிதொகுப்பாளர் | 1 | 3 | 4 |

**<u>IIபொறியியல்மற்றும் குடிநீர் பிரிவு (நகரமைப்புபணியிடங்களுடன் சேர்த்து ஒருங்கிணைக்கப்பட்டது)</u>**

| வ. எண் | பணியிடம் | மண்டலஅலுவலகம் | மையஅலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | செயற்பொறியாளர் (நகரமைப்பு) | – | 1 | 1 |
| 2 | செயற்பொறியாளர் (பணிகள்) | – | 1 | 1 |
| 3 | உதவிசெயற்பொறியாளர் (நகரமைப்பு) | – | 1 | 1 |
| 4 | உதவிசெயற்பொறியாளர் (பணிகள்) | 4 | 1 | 5 |
| 5 | இளநிலைபொறியாளர் / உதவிபொறியாளர் | 8 | 2 | 10 |
| 6 | தொழில்நுட்பஉதவியாளர் | 4 | 2 | 6 |
| 7 | செயல்திறன் உதவியாளர் நிலை – I | 4 | 1 | 5 |
| 8 | செயல்திறன் உதவியாளர் நிலை – II | 30 | 4 | 34 |

**<u>III. பொதுசுகாதாரப் பணி</u>**

| வ. எண் | பணியிடம் | மண்டலஅலுவலகம் | மையஅலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | மாநகரநலஅலுவலர் | – | 1 | 1 |
| 2 | உதவிமாநகரநலஅலுவலர் | – | 1 | 1 |
| 3 | சுகாதாரஆய்வாளர் | 20 | – | 20 |
| 4 | களப்பணிஉதவியாளர் (Supernumerary Post) | 1 | – | 1 |
| 5 | லாரி கிளீனர் (Supernumerary Post) | 1 | – | 1 |
| 6 | பொதுமருத்துவஅலுவலர் | தற்போதுஇப்பணியிடங்கள்NUHMதிட்டத்தின் கீழ்வருவதாலும் காலியாகும் பணியிடங்கள்பொதுசுகாதாரதுறை மூலம் | | 3 |
| 7 | மருந்தாளுநர் | | | 1 |

| | | | |
|---|---|---|---|
| 8 | பகுதிசுகாதாரசெவிலியர் | நிரப்பப்பட்டுவருவதாலும் தற்போதுஇப்பணியிடங்களில்பணியாற்றி வரும் பணியாளர்கள் ஓய்வு பெறும் வரைஇப்பணியிலேயேதொடர அனுமதிக்கலாம். | 2 |
| 9 | நகரசுகாதாரசெலவியிர் | | 11 |
| 10 | மகப்பேறுஉதவியாளர் | | 3 |
| 11 | மகப்பேறுஆயா | | 4 |
| 12 | Class IVபெண் உதவியாளர் | | 1 |

**<u>IV. அடிப்படைப் பணி</u>**

| வ. எண் | பணியிடம் | மண்டலஅலுவலகம் | மையஅலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலகஉதவியாளர் | 8 | 9 | 17 |
| 2 | இரவுகாவலர் | – | 1 | 1 |
| 3 | அலுவலகதுப்புரவாளர் | – | 1 | 1 |
| 4 | செயல்திறனற்றஉதவியாளர் | 30 | 3 | 33 |
| 5 | துப்புரவுபணியாளர் | 333 | – | 333 |

நாகர்கோவில் மாநகராட்சியின் சொந்த ஆண்டு வருவாய் (OwnIcome) ரூ.80.24 கோடி ஆகும். ஏற்கெனவே உள்ள பணியிடங்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் செலவினங்கள் ரூ.32.21 கோடி ஆகும்.மாநகராட்சி பணி விதிகளின்படி புதிய பணியிடங்களை தோற்றுவிப்பதால் ஆண்டுக்கு சராசரியாக 4.27 கோடி செலவினம் ஆகும். ஏற்கெனவேஉள்ளபணியிடங்கள்மற்றும் புதிதாக பணியிடங்கள் தோற்றுவிப்பதால் ஆகும் செலவினம் 36.48 கோடி ஆகும். இச்செலவினம் பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதிய செலவினங்கள் நாகர்கோவில் மாநகராட்சியின் ஆண்டு வருவாயில் 45.46 % ஆகும்.

எனவே பணியாளர்களின் ஊதிய செலவினம் 49 %–க்கு குறைவாக உள்ளதால் நாகர்கோவில் மாநகராட்சிக்கு தேவையான புதிய பணியிடங்களை தோற்றுவிக்கவும், ஏற்கெனவே சிறப்புநிலை நகராட்சி நிலையில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் மாநகராட்சி பணி விதிகளுக்கேற்ப இணையான பணியிடங்களை மாநகராட்சி பணியிடங்களாக அனுமதிக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர் வழி அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி கோரப்பப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்

கோப்பு எண். சி1/3348/2019

**தீர்மானம் எண். 195– அங்கீகரிக்கப்பட்டது.**

27. நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்.(ப) 41, நாள். 28.02.2019–ல் 01.03.2019 முதல் நாகர்கோவில் நகராட்சியைமாநகராட்சியாகதரம் உயர்த்தி உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து, 01.03.2019 முதல் மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது., ஏற்கெனவே நாகர்கோவில் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட கீழ்க்கண்ட பணியிடங்களை அரசாணை எண்.(ப) 237 நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 26.09.1996–ல் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநகராட்சிகள் பணிவிதிகள் 1996–ன்படி கீழ்க்கண்டவாறு பெயர் மாற்றம் செய்யவேண்டும்.

**I. பதவிபெயர் மாற்றம் செய்யப்படவேண்டியபணியிடங்கள்**

**<u>பொதுப்பணி</u>**

| வ. எண் | ஏற்கெனவேநாகர்கோவில்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டபணியிடங்கள் | | மாநகராட்சிபணிவிதிகளின்படிபதவி பெயர் மாற்றப்படவேண்டியபணியிடம் | |
|---|---|---|---|---|
| | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை | பணியிடத்தின் பெயர் | எண்ணிக்கை |
| 1 | மேலாளர் (வகுப்புI) | 1 | நிர்வாகஅலுவலர் | 1 |
| 2 | வருவாய்அலுவலர் (வகுப்புIA) | 1 | கண்காணிப்பாளர் | 1 |
| 3 | கணக்கர் நிலைII | 1 | உதவிவருவாய் அலுவலர் (இணையானஊதியவி திகத்தில்பணியிடம் இல்லாததால்தரம் உயர்த்தலாம்) | 1 |
| 4 | இளநிலைஉதவியாளர் | 24 | இளநிலைஉதவியாளர் மற்றும் தட்டச்சர் | 24 |
| 5 | வருவாய்ஆய்வாளர் | 4 | உதவியாளர் | 4 |
| 6 | வருவாய்உதவியாளர் | 28 | வரிவசூலர் | 28 |

**<u>பொறியியல்மற்றும் குடிநீர் விநியோகப் பணி (நகரமைப்புபணியுடன் சேர்த்து ஒருங்கிணைக்கப்பட்டது)</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | முதுநிலைநகரமைப்புஅலுவலர் | 1 | செயற்பொறியாளர் (நகரமைப்பு) | 1 |
| 8 | நகரமைப்புஆய்வாளர் | 5 | இளநிலைபொறியாளர் (நகரமைப்பு) | 5 |
| 9 | பணிமேற்பார்வையாளர் | 2 | தொழில்நுட்பஉதவியாளர் | 2 |
| 10 | வரைவாளர் | 1 | தொழில்நுட்பஉதவியாளர் | 1 |
| 11 | மின் கண்காணிப்பாளர் நிலைII | 1 | தொழில்நுட்பஉதவியாளர் | 1 |
| 12 | பில்டர் பெட் ஆப்பரேட்டர் | 2 | செயல்திறன் உதவியாளர் நிலைI | 2 |
| 13 | வேலைஆய்வர் | 6 | செயல்திறன் உதவியாளர் | 34 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | மின் பணியாளர் நிலைII | 3 | நிலைII | |
| 15 | பொருத்துநர் | 5 | | |
| 16 | வயர்மேன் | 7 | | |
| 17 | வயர் மேன் ஹெல்ப்பர் | 7 | | |
| 18 | குழாய்ஆய்வர் | 1 | | |
| 19 | அளவுமானிகணக் கீட்டாளர் | 5 | | |
| 20 | டேன்காக் | 5 | செயல்திறனற்றபணியாளர் | 33 |
| 21 | பம்ப்ஹவுஸ் கிளீனர் | 3 | | |
| 22 | பவுண்டன் கிளீனர் | 3 | | |
| 23 | பில்டர் மஸ்தூர் | 7 | | |
| 24 | செயின்மேன் | 3 | | |
| 25 | தோட்டகாரர் | 12 | | |

**<u>பொதுசுகாதாரப்பணி</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 26 | நகர் நலஅலுவலர் | 1 | உதவி மாநகரநலஅலுவலர் | 1 |
| 27 | துப்புரவுபணிமேற்பார்வையாளர் (Sanitary Supervisor) | 16 | பொதுசுகாதாரமேற்பார்வையாளர் (Conservancy Supervisor) | 16 |

மேற்படி பணியிடங்களை மாநகராட்சி பணிவிதிகளின்படி பெயர் மாற்றம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் வழி அரசுக்கு பிரேரணைஅனுப்ப மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். சி1/3348/2019

**தீர்மானம் எண். 196– அங்கீகரிக்கப்பட்டது.**

28. நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்.(ப) 41, நாள். 28.02.2019–ல் 01.03.2019 முதல் நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து, 01.03.2019 முதல் மாநகராட்சியாக செயல்பட்டுவருகிறது., அரசாணை எண்.(ப) 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 26.09.1996–ல் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடுமாநகராட்சிகள் பணிவிதிகள் 1996–ன்படி ஏற்கெனவே நாகர்கோவில் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட நிரந்தரபணியிடங்களில் தற்போதுகாலியாக உள்ளகீழ்க்கண்டபணியிடங்களைமாநகராட்சிபணிவிதிகளின்படிநிரப்பிக்கொள்ளமன்றஅனுமதிகோரப் படுகிறது.

**<u>காலிபணியிடவிபரம்</u>**

| வ. எண் | பணியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவியாளர் | 3 |
| 2 | இளநிலைஉதவியாளர் மற்றும் தட்டச்சர் | 4 |
| 3 | வரிவசூலர் | 11 |

| | | |
|---|---|---|
| 4 | பொதுசுகாதாரமேற்பார்வையாளர் | 2 |
| 5 | ஓட்டுநர் | 8 |
| 6 | பதிவறைஎழுத்தர் | 1 |
| 7 | செயல்திறன் உதவியாளர் நிலைII | 15 |
| 8 | செயல்திறனற்றபணியாளர் | 21 |
| 9 | அலுவலகஉதவியாளர் | 1 |
| | **மொத்தபணிடங்கள்** | **65** |

நாகர்கோவில் மாநகராட்சியின் ஆண்டு வருவாய் ரூ.80.24 கோடி ஆகும். மேற்படி காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் ஆண்டுக்கு 1.80 கோடி ஆகும். ஏற்கெனவே மாநகராட்சி பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியசெலவினம் ரூ.32.21 கோடி ஆகும்.மேற்படி காலிபணியிடங்களை நிரப்புவதால் பணியாளர்களின் ஊதியசெலவினம் ரூ.34.01 கோடியாகும். இச்செலவினம் மாநகராட்சியின் சொந்த ஆண்டு வருவாயில் 42.38%ஆகும்.

மேற்படிபணியிடங்களைமாநகராட்சிபணிவிதிகளின்படிநிரப்பநகராட்சிநிர்வாகஆணையர் வழிஅரசுக்குபிரேரணைஅனுப்பமன்றஅனுமதிகோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். சி1/3348/2019

**தீர்மானம் எண். 197— அங்கீகரிக்கப்பட்டது.**

29. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறைஅரசாணை எண்.(ப) 41, நாள். 28.02.2019—ல் 01.03.2019 முதல் நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து, 01.03.2019 முதல் மாநகராட்சியாக செயல்பட்டுவருகிறது., அரசாணை (நிலை) எண். 17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 14.01.2011—ன்படி நாகர்கோவில் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட ஆசாரிபள்ளம் பேரூராட்சி, வடக்குசூரங்குடி, பெருவிளை, கரியமாணிக்கப்புரம் மற்றும் காந்திபுரம் ஊராட்சிகளில் பணியாற்றி தற்போது நாகர்கோவில் மாநகராட்சியில் சிறப்பு காலமுறைஊதியம், தினக்கூலி, ஒப்பந்தம், தொகுப்பூதியத்தில் தொடர்ந்து நாகர்கோவில் மாநகராட்சியில் பணியாற்றிவரும் பணியாளர்கள் விபரம்

**அட்டவணைI**

| வ. எண் | பெயர் / பதவி | நாகர்கோவில்மாநகராட்சியில்செய்துவரும் பணிகள் | கல்விதகுதி | சிறப்புகாலமுறைஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | H.நாகராஜன்,<br>ஊராட்சிசெயலாளர் | வரிவசூல்பணிகள் | 12th Pass | 7700—24200 |
| 2 | V.முருகன்,<br>ஊராட்சிசெயலாளர் | வரிவசூல்பணிகள் | 12th Pass | 7700—24200 |
| 3 | P.சுஜித்,<br>ஊராட்சிசெயலாளர் | வரிவசூல்பணிகள் | B.Sc, B.Ed | 7700—24200 |

**அட்டவணைII**

**தினக்கூலி, ஒப்பந்தம் மற்றும் தொகுப்பூதியபணியாளர்கள்விபரம்**

| வ. எண் | பெயர் / பதவி | நாகர்கோவில்நகராட்சியில் செய்துவரும் பணிவிபரம் | கல்விதகுதி |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | ஏ.சுந்தர்ராஜ், குடிநீர் உடனாள் | குடிநீர் மேல்நிலைநீர்தேக்கதொட்டிஇயக்கி தினசரிகுடிநீர் வழங்குதல் | B.A |
| 2 | வி.ராதாகிருஷ்ணன் குடிநீர் உடனாள் | குடிநீர் அளவுமானிகணக்கீட்டுபணிகள் | 12th Pass |
| 3 | பி. ராஜேந்திரன், குடிநீர் உடனாள் | குடிநீர் மேல்நிலைநீர்தேக்கதொட்டிஇயக்கி தினசரிகுடிநீர் வழங்குதல் | 8th Pass |
| 4 | ஆர்.ஜானகிராமன், குடிநீர் உடனாள் | குடிநீர் மேல்நிலைநீர்தேக்கதொட்டிஇயக்கி தினசரிகுடிநீர் வழங்குதல் | 8th Pass |
| 5 | எஸ். ராஜன், குடிநீர் உடனாள் | குடிநீர் அளவுமானிகணக்கீட்டுபணிகள் | 12th Pass |
| 6 | ற்றி. ஈஸ்வரமூர்த்தி, குடிநீர் உடனாள் | குடிநீர் மேல்நிலைநீர்தேக்கதொட்டிஇயக்கி தினசரிகுடிநீர் வழங்குதல் | 8th Pass |
| 7 | ற்றி.நிர்மலா, குடிநீர் உடனாள் | குடிநீர் அளவுமானிகணக்கீட்டு பணிகள் | 12th Pass, Tamil and English Typing Pass |
| 8 | ஏ. ஆறுமுகம், துப்புரவுபணியாளர் | துப்புரவுபணிகள் | 4th Pass |
| 9 | பி. முத்துசெல்வம், துப்புரவுபணியாளர் | துப்புரவுபணிகள் | 5th Pass |
| 10 | டி.அருள்ஜெகன், கணினிஇயக்குபவர் | அலுவலககணினிசார்ந்த பணிகள் | 12th Pass, Tamil and English Typing Pass, ADCA Pass |

அரசாணை எண். 29, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 13.02.2013–ல், மேற்படி பணியாளர்கள் அதே நிலையில் தொடரஉத்தரவிட்டபடி நாளதுவரை அதே நிலையில் பணிபுரிந்துவருகின்றனர்.

அட்டவணைI–ல் கண்ட சிறப்புகாலமுறை ஊதியத்தில் பணியாற்றி வரும் பணியாளர்களையும் அட்டவணைII–ல் கண்டபணியாளர்களையும் அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் காலமுறை ஊதியத்தில் பணிநியமனம் செய்யமன்ற அனுமதிகோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– அட்டவணைI, II–ல் கண்ட பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியசெலவினம் ஆண்டுக்கு ரூ.32.62 லட்சம் ஆகும். மேலும் மேற்படிபணியாளர்களைகாலமுறைஊதியத்தில்பணிநியமனம் செய்வதால் மாநகராட்சிக்கு கூடுதலாக ரூ.9.33 லட்சம் செலவு ஏற்படும். எனவே மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். சி1/3348/2019

***தீர்மானம் எண். 198– அங்கீகரிக்கப்பட்டது.***

30. இந்நகராட்சி பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் 2017–2018–ன் கீழ் பணிகள் மேற்கொள்ள கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினமுரசு நாளேட்டில் பிரசுரம் செய்த வகைக்கு ரூ.17010/– வழங்க அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.12478/2017/இ3

***தீர்மானம் எண். 199– அங்கீகரிக்கப்பட்டது.***

31. இம்மாநகராட்சிக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பிரதான இரண்டாவது கேட் எதிரே உள்ள பள்ளமான பகுதியில் கான்கிரீட் தளம் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.13,700/–க்கு அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் விதிகள் எண்.1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி பணியினை திரு.V.ஜோசப் அருள் ராஜ், ஒப்பந்தக்காரர் மூலம் மேற்கொள்வது அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4265/2019/இ1

***தீர்மானம் எண்.200– அங்கீகரிக்கப்பட்டது.***

32. நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018–ன் கீழ் வார்டு எண்.37–ல் இசங்கன்விளை மாலிக்வீதி தெருவில் உள்ள கிணற்றை சுற்றி சுற்று சுவர் அமைத்து அருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஆ3/2139/2017, நாள். 29.11.2017 படி ரூ.4.00 லட்சத்தில் பணி செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திருமதி.எம்.ஹெப்சிபாய் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி ஆரம்பிக்கப்படாத நிலையில் மேற்படி ஒப்பந்ததாரரின் உரிமம் ரத்து செய்யப்பட்டு கறுப்பு பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதால் மேற்படி பணியினை திரு.எஸ்.சுஜின், உதவி பொறியாளர் பெயரில் துறை மூலம் பணி மேற்கொள்ள அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்
மதிப்பீட்டு எண்.145/2017–2018
**தீர்மானம் எண். 201– அங்கீகரிக்கப்பட்டது.**

**33.** செயலர், மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:எம்இ2/5239/2016, நாள்:23.04.2019 மற்றும் அரசு ஆணை (நிலை) எண்:41 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்:28.02.2019–இன்படி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மாநகராட்சி சட்ட விதிகளின்படி மாநகராட்சிக்குரிய 1) கணக்கு (Accounts Committee), 2) நியமனக்குழு (Appointment Committee), 3) பொது சுகாதாரம் (Public Health Committee), 4) வரி விதிப்பு மற்றும் நிதி (Taxation and Finance Committee), 5) நகரமைப்பு (Town Planning Committee) மற்றும் 6) பணிகள் (Works Committee) நிலைக்குழுக்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமெனவும், தமிழ்நாடு மாநகராட்சிகள் நிலைக்குழுக்கள் தோற்றுவித்தல் சட்டம் 1997 விதி 4–இன்படி மாநகராட்சிக்குள்ள பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து ஒவ்வொரு நிலைக்குழுவிலும் குறைந்த பட்சம் 6 முதல் அதிக பட்சமாக 15 மாமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கலாம் எனவும் நிலைக்குழுக்களில் இடம் பெறும் மாமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் அதில் பெண் உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் எண்ணிக்கைகளின் விபரத்தினை மாமன்றத்தில் முடிவு செய்தும், மறைமுக தேர்தல் நடத்திட ஏதுவாக அதன் விபரத்தினை இணை இயக்குநருக்கு அனுப்பிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இம்மாநகராட்சி நகராட்சியாக இருந்த நிலையில் உள்ள 52 வார்டுகளை மட்டும் உள்ளடக்கி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் மேற்கண்ட 1) கணக்கு (Accounts Committee), 2) நியமனக்குழு (Appointment Committee), 3) பொது சுகாதாரம் (Public Health Committee), 4) வரி விதிப்பு மற்றும் நிதி (Taxation and Finance Committee), 5) நகரமைப்பு (Town Planning Committee) மற்றும் 6) பணிகள் (Works Committee) என்ற ஆறு நிலைக்குழுக்கான மாமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினை பின்வருமாறு நிர்ணயம் செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிலைக்குழு விபரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கணக்கு | 3 | 3 | 6 |
| 2 | நியமனக்குழு | 3 | 3 | 6 |
| 3 | பொது சுகாதாரம் | 3 | 3 | 6 |
| 4 | வரிவிதிப்பு மற்றும் நிதி | 3 | 3 | 6 |
| 5 | நகரமைப்பு | 3 | 3 | 6 |
| 6 | பணிகள் | 3 | 3 | 6 |
| மொத்தம் | | 18 | 18 | 36 |

**அலுவலக குறிப்பு:**

1. இம்மாமன்றம் 1) கணக்கு (Accounts Committee), 2) நியமனக்குழு (Appointment Committee), 3) பொது சுகாதாரம் (Public Health Committee), 4) வரி விதிப்பு மற்றும் நிதி (Taxation and Finance Committee), 5) நகரமைப்பு (Town Planning Committee) மற்றும் 6) பணிகள் (Works Committee) என்ற ஆறு நிலைக்குழு தலா 6 மாமன்ற உறுப்பினர்கள் இடம் பெறவும், அவ்வுறுப்பினர்களில் 50 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திடவும், மேலும் மேற்கண்ட ஒவ்வொரு நிலைக்குழுக்களிலும்

தேர்ந்தெடுக்கப்படும் மாமன்ற உறுப்பினர்களில் அவர்களுக்குள் ஒருவரை மேற்படி நிலைக்குழுவின் தலைவராக தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் மாமன்றம் இசைவு தெரிவிக்கலாம்.

2. மேலும் மேற்கண்டவாறு இம்மாநகராட்சியின் 6 நிலைக்குழுக்களுக்கும் 36 உறுப்பினர்களை எண்ணிக்கையாக (Strength Fixaton) நிர்ணயம் செய்திட அரசின் அனுமதியினை பெறவும், மேற்கண்ட எண்ணிக்கையினை மாநில தேர்தல் ஆணையத்திற்கு தெரிவித்து மறைமுக தேர்தல் நடத்திடவும் இசைவு தெரிவிக்கலாம்
கோப்பு எண்:12236/1999/எப்1

**தீர்மானம் எண். 202– அங்கீகரிக்கப்பட்டது.**

34. இம்மாநகராட்சிக்குட்பட்ட பாலமோர் ரோடு புல எண்.E11/2-2pt திருமதி.லீலா வாசுதேவன் என்பவரால் ஆக்கிரதிப்பு செய்யப்பட்ட பகுதியினை அகற்றுதல் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு W.P.(MD) No: 12532/2018 இன் படி தீர்ப்பு மாநகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளது.

எனவே மாநகராட்சி சார்பில் வழக்கில் ஆஜரான திரு.P.ஆதிமூலபாண்டியன் வழக்கறிஞருக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/– வழங்கவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் மற்றும் மேற்கண்ட வழக்கில் ஆக்கிரமிப்புகளை அகற்ற தெரிவித்து Formc தினதந்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.8350/– தினத்தந்தி நிறுவனத்திற்கு வழங்கவும் அங்கீகாரத்திற்கும் மற்றும் தினமுரசு நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.4872/– தினமுரச நாளிதழுக்கு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10591/2014/எப்1

**தீர்மானம் எண். 203– அங்கீகரிக்கப்பட்டது.**

35.இம்மாநகராட்சிக்குட்பட்ட வடிவீஸ்வரம் கிராமம் புல எண்.D14/16-1pt, 6-3pt, 5-3pt, 7-1, 7-2pt, 7-3pt, 8-1A 8-5pt இல் 22328,768 ச,மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு எண்.ம.வ(மு) /நா.உ.தி.கு எண்.15/2019 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க உறுப்பினர் செயலர் (பொ) நா.உ.தி.கு.அவர்களால் ந.க.எண்.598/2019 நா.உ.தி.கு, நாள். 17.05.2019 இன் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட மனைப்பிரிவில் சாலைப்பரப்பளவு 5234.47 மனையையும் பொது ஒதுக்கீடான 1113.96$m^2$பரப்பளவு மனையினையும் ஆணையாளர் பெயருக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சாலைப்பரப்பளவு 5234.47 மனையும் பொது ஒசர் 1113.96$m^2$பரப்பளவு மனையினையும் ஆணையாளர் பெயருக்கு தானப்பத்திரம் மூலம் பெற அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5002/2019/எப்1

**தீர்மானம் எண். 204– அங்கீகரிக்கப்பட்டது.**

36. இம்மாநகராட்சிக்குட்பட்ட நீண்டகரை 'ஏ' கிராமம் நகரளவு எண். K1/15-12A–இல் 1415.552 ச.மீ பரப்பளவு கொண்ட மனையில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலை ஒதுக்கீட்டினை நகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்டக்குழுமம் நாகர்கோவில் அவர்களின் கடிதம்

ந.க.எண்.647/2018 நா.உ.தி.கு நாள்.10.07.2018 இல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து 335.17 ச.மீ பரப்பளவு கொண்ட சாலை மனையை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்.336, நாள்.31.07.2018 இன்படி அங்கீகரிக்கப்பட்டு தானபத்திரம் எண்.1107/2019 நாள்.10.04.2019 இன் படி தானப்பத்திரம் பதிவு செய்து இம்மாநகராட்சியில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாகர்கோவில் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி மேற்கண்ட 1415.552 ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைகளுக்கு ம.வ/நா.உ.தி.கு எண்.02/2019 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு 1971– ஆம் ஆண்டு நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 49 இன் கீழ் நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடங்களுக்கு தி.அ/ம.அ/நா.உ.தி.கு எண்.02/2019 என திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு குடியிருப்பு மனையாக ஒப்புதல் வழங்க அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.7584/2018/எப்1

**தீர்மானம் எண். 205– அங்கீகரிக்கப்பட்டது.**

37. இம்மாநகராட்சிக்குட்பட்ட சரக்கல்விளை புல எண்.L9/9-1, 9-2, 9-3 (pt) இல் 3076.48 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு மனுதாரர்கள் திரு.P. மனோ, திரு.S.முருகன் மற்றும் திரு.தவசிப்பெருமாள் என்பவர்களின் விண்ணபத்தினை ஏற்று உறுப்பினர் செயலர் (பொ) உள்ளூர் திட்டக்குழுமம், நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண்.162/2019 நா.உ.தி.கு நாள். 29.04.2019 இன் படி அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ.(மு)/நா.உ.தி.கு எண்.13/2019 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சாலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 601.02 ச.மீ பரப்பளவு மற்றும் பொது ஒதுக்கீடு (OSR) 245.00 ச.மீ பரப்பளவு ஆகியவற்றை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4181/2019/எப்1

**தீர்மானம் எண். 206– அங்கீகரிக்கப்பட்டது.**

38. இம்மாநகராட்சிக்குட்பட்ட நீண்டகரை ‘ஏ‘ கிராமம் புல எண். 628/18, 19 இல் 1336.00 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ (மு) / நா.உ.தி.கு எண்.07/2019 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே ஒப்புதல் வழங்கப்பட மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடான பூங்காவிற்கான 76.08$m^2$மனையையும் சாலைக்கான 174.61$m^2$மனையையும் மாநகராட்சி ஆணையாளர் பெயரில் தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்க அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.3812/2019/எப்1

**தீர்மானம் எண். 207– அங்கீகரிக்கப்பட்டது.**

39. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.46, இராமன்பிள்ளை தெரு, புல எண்.P7/90 இல் கட்டட அனுமதி பெறாமல் நகராட்சி அதிகார வரம்பிற்கு மேல் கட்டடம் கட்டியதால் மாண்பமை

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.W.P.(MD) No:16628/2018 நாள்.21.01.2019 ஆம் தேதிய உத்தரவின் அடிப்படையில் நாகர்கோவில் உள்ளூர்திட்டக்குழுமம் மூலம் மேற்கண்ட கட்டடம் பூட்டி முத்திரையிடப்பட்டது.

இந்நிலையில் கூடுதல் செயலாளர் (தொழில்நுட்பம்) வீட்டு வசதி மற்றும் நகர வளர்ச்சித்துறை, தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2449/UD4(1) /2018-1 நாள். 07.02.2019 இன் படி மேற்படி கட்டிடத்தின் முன்புற பால்கனி, பக்க இடைவெளி மற்றும் பின்பக்கத்தில் கட்டிட விதிமுறைகளின்படி இடிக்கவும், மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தும் வரைபடம் (Demolition Plan) அனுமதி பெற்ற பின்னரே பூட்டி முத்திரையிடப்பட்ட கட்டிடத்தினை திறக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வழக்கு W.P.(MD) No:16628/2018 இன் வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்தியமைக்கும் நகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.7,500/– வழங்கவும் மற்றும் வழக்கிடை செலவுகளுக்கும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.16177/2012/எப்1

**தீர்மானம் எண். 208– அங்கீகரிக்கப்பட்டது.**

40. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் சந்தையில் கடை எண் 121 திரு. I. சுயம்பு என்பவர் உரிமம் எடுத்த நடத்திவந்தார். அன்னார் 12/08/2018 அன்று காலமாகிவிட்டார். மேலும் நகராட்சி வருவாய் ஆய்வாளரின் அறிக்கையில் கடை எண் 121 திரு. I. சுயம்பு என்பவரின் பெயரில் உள்ளது என்றும் அன்னார் காலம் சென்றுவிட்டார்கள் மேற்படி கடையினை திரு. I. சுயம்பு என்பவர் நகராட்சிக்கு சமாப்பிக்கப்பட்ட ஒப்பந்தபத்திரத்தில் வாரிசுதாரர் என குறிப்பிட்டுள்ள திரு. கிருஷ்ணன் என்பவர் நடத்தி வருவதாகவும், திரு. கிருஷ்ணன் என்பவரிடம் நேரில் சென்று விசாரணை மேற்கொண்டதில் நான் காலம் சென்ற திரு.I. சுயம்பு என்பவருக்கு பங்குதாரர் என்றும் நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிமொழி பத்திரத்தில் என்னுடைய பெயரைதான் வாரிசாக போட்டுள்ளார் என்றும் மேலும் திரு. I. சுயம்பு என்பவர் தனக்கு உடம்பு சரியில்லாத காரணத்தினால் கடையினை என்னை நடத்துமாறு ஒப்படைத்துள்ளார் அதற்காக நான் திரு. I. சுயம்பு என்பவருக்கு அவரது பங்கு தொகை ரூ 1,75,000/– வழங்கி கையொப்பம் பெற்றுள்ளேன் என்றும் திரு. I. சுயம்பு என்பவர் வாரிசுதாரர் என குறிப்பிட்டுள்ள நான்தான் மேற்படி கடையினை இதுவரையிலும் நடத்தி வருகிறேன் என்றும் தெரிவித்துள்ளதாக வருவாய் ஆய்வாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி கடையினை உரிமம் எடுத்த திரு. I. சுயம்பு என்பவர் காலமாகிவிட்டதாலும், மேற்படி கடையில் திரு. கிருஷ்ணன் என்பவர் உள்வாடகைக்கு இருப்பதாலும் நகராட்சி மேலாளர் மற்றும் வருவாய் அலுவலர் (பொ) அவர்களின் நேரடி அறிவுரையின்படி மேறபடி கடை

எண் 121 மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், விள்ம்பர செலவினத்திற்கும் மன்ற அங்கீகாரத்திற்கு,

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.**13288/2018/அ13**
***தீர்மானம் எண். 209– அங்கீகரிக்கப்பட்டது.***

**41.**நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் Phase II கடை எண் **17**, வரிவிதிப்பு எண் **2011917** திரு. சுந்திரசேகர் என்பவர் உரிமம் எடுத்து நடத்திவந்தார். தொழில் நஷ்டம் காரணத்தால் மேற்படி கடையினை நடத்த முடியவில்லை என்றும் எனவே **31–03–2019** முதல் கடையினை ஒப்படைப்பு செய்வதாகவும், மேலும் மேற்படி கடைக்கு தான் செலுத்தவேண்டிய வாடகை தொகை ரூ **75,720/–** ஐ வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்திடவும் என **25–03–2019** தேதிய விண்ணப்பத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் தனது அறிக்கையில் மேற்படி கடை எண் **17**–ஐ உரிமம் எடுத்த திரு. சுந்திரசேகர் என்பவருக்கு தொழில் நஷ்டம் காரணமாக தொடர்ந்து நடத்த இயலாத நிலையுள்ளதாலும் மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாகவும், கடை வாடகை நிலுவையினை வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்யவும் உரிமதாரர் திரு, சந்திரசேகர் என்பவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி கடையின் உரிம காலம் முடிவடையும் முன்னால் கடையினை மாநகராட்சி வசம் ஒப்படைக்கும் நிலையில் **2016–2017**–ஆம் ஆண்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் கண்ட கடைகள் அனுபவிக்கும் உரிமத்திற்கான சிறப்பு கட்டுப்பாடுகள் வரிகை எண் **7**–ன் படி இம்மாநகராட்சிக்கு எந்தவவகையிலும் நிதியிழப்பு ஏற்படாதவாறு மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு ஒப்படைக்கும் வரையுலான மாத வாடகை தொகை மற்றும் மறு பொது எலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் நிலையில் நிதியிழப்பு ஏற்பட்டாலும் திரு. சுந்திரசேகர் என்பவரே பொறுப்பாக்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், தொகை செலுத்தாதபட்சத்தில் நீதி மன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு தொகையினை வசூல் செய்யப்படும் என்பதையும் உரிமதாரருக்கு விபரம் தெரிவித்து வைப்புத் தொகையினை நிறுத்தி வைத்தும் மேல் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் Phase II கடை எண் **20**, வரிவிதிப்பு எண் **2011920** திரு. M.K. ராமசுப்பு என்பவர் உரிமம் எடுத்து நடத்திவந்தார். தொழில் நஷ்டம் காரணத்தால் மேற்படி கடையினை நடத்த முடியவில்லை என்றும் எனவே **31–03–2019** முதல் கடையினை ஒப்படைப்பு செய்வதாகவும், மேலும் மேற்படி கடைக்கு தான் செலுத்தவேண்டிய வாடகை தொகை ரூ **2,18,928/–** ஐ வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்திடவும் என **25–03–2019** தேதிய விண்ணப்பத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் தனது அறிக்கையில் மேற்படி கடை எண் **20**–ஐ உரிமம் எடுத்த திரு. M.K. ராமசுப்பு என்பவருக்கு தொழில் நஷ்டம் காரணமாக

தொடர்ந்து நடத்த இயலாத நிலையுள்ளதாலும் மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாகவும், கடை வாடகை நிலுவையினை வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்யவும் உரிமதாரர் திரு. M.K. ராமசுப்பு என்பவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி கடையின் உரிம காலம் முடிவடையும் முன்னால் கடையினை மாநகராட்சி வசம் ஒப்படைக்கும் நிலையில் 2016–2017–ஆம் ஆண்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் கண்ட கடைகள் அனுபவிக்கும் உரிமத்திற்கான சிறப்பு கட்டுப்பாடுகள் வரிகை எண் 7–ன் படி இம்மாநகராட்சிக்கு எந்தவவகையிலும் நிதியிழப்பு ஏற்படாதவாறு மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு ஒப்படைக்கும் வரையுலான மாத வாடகை தொகை மற்றும் மறு பொது எலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் நிலையில் நிதியிழப்பு ஏற்பட்டாலும் திரு. M.K. ராமசுப்பு என்பவரே பொறுப்பாக்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், தொகை செலுத்தாதபட்சத்தில் நீதி மன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு தொகையினை வசூல் செய்யப்படும் என்பதையும் உரிமதாரருக்கு விபரம் தெரிவித்து வைப்புத் தொகையினை நிறுத்தி வைத்தும் மேல் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வாளரின் அறிக்கையில் தெரிவித்துள்ளபடி கடை எண் 17 மற்றும் கடை எண் 20, வரிவிதிப்பு எண் 2011917 மற்றும் 2011920 திரு. சந்திரசேகர் மற்றும் திரு.M.K. ராமசுப்பு ஆகியோர் கடைக்கு செலுத்த வேண்டிய மாத வாடகையினை அவர்களின் வைப்புத் தொகையில் இருந்த ஈடு செய்யவும், மேலும் மேற்படி கடைகளை மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் நிலையில் நிதியிழப்பு ஏற்பட்டாலும் மேற்படி உரிமதாரர்களே பொறுப்பாக்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், தொகை செலுத்தாதபட்சத்தில் நீதி மன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு தொகையினை வசூல் செய்யப்படும் என்பதையும் உரிமதாரருக்கு விபரம் தெரிவித்தும் மேற்படி கடைகளுக்கு பொது எலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் அதற்காவும் விளம்பர செலவினத்திற்கும் மற்றும் இதர செலவினத்திற்கும் மன்ற அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 03314/2019/அ6

**தீர்மானம் எண். 210– அங்கீகரிக்கப்பட்டது.**

**42.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8–ல் தளியபுரம் பூங்காவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் மைய எண்.13–ல் மின்வசதி இல்லாத காரணத்தினால் மேற்படி மையத்திற்கு மின் வசதி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.25,000/–க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் விதி எண் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி பணியினை திரு.ஜி.ராஜன் ஒப்பந்தக்காரர் என்பவர் மூலம் மேற்க்கொண்டதும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1369/2019/இ4

**தீர்மானம் எண். 211– அங்கீகரிக்கப்பட்டது.**